செ.வெ.எண்: 51 நாள்: 21.11.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் ,கீழையூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம், கீழையூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.அந்தவகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு முழுவதும் கொரோனா பெருந்தொற்று பரவலை முழுமையாக கட்டுபடுத்திட தமிழக அரசு பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் எடுத்து “மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்” நடத்தப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து வேதாரண்யம் ஊராட்சிஒன்றியம் ஆறுகாட்டுத்துறை, வேப்பந்தேவன் காடு, மறைஞாயநல்லூர் ஆகிய கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீடு வீடாகச்சென்று கொரோனா தடுப்பூசி போடப்படுவதையும், வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட ராஜாஜி பூங்கா தோப்புத்துறை ஊராட்சிஒன்றிய நடுநிலைப்பள்ளி, கீழையூர் ஊராட்சி ஒன்றியம் காமேஸ்வரம் ஊராட்சி மாரியம்மன்கோவில், பிரதாபராமபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, செருதூர்கிராமம், வேட்டைக்காரனிருப்பு ஊராட்சி மாரியம்மன்கோவில், புதுப்பள்ளி ஊராட்சி மழைமுத்து மாரியம்மன்கோவில், கோவில்பத்து அங்கன்வாடிமையம், விழுந்தாமவடி அரசினர் மேல்நிலைப்பள்ளி, வேளாங்கண்ணி திருப்பயணிகள் தங்கும் இடத்தில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி முகாமினையும் ஆகிய இடங்களில் நடைபெற்றுவரும் கொரோனா தடுப்பூசி முகாமினையும் மற்றும் தோப்புத்துறை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றுவரும் வாக்களார் சுருக்கம் திருத்த முகாமினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கொரோனா பெருந்தொற்று நோயிலிருந்து பாதுகாத்துக் கெள்ள தடுப்பூசி ஒன்றே பேராயுதம் என்பதால் இன்று நடைபெற்ற மெகாதடுப்பூசி முகாமில் 21.11.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை அனைத்து அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையம் மற்றும் 754 சிறப்பு முகாம்களும், மற்றும் (Mobile Vaccination Team) வீடுவீடாக சென்று 20,317 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**